# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## *Ang Mo Kio Tamil Methodist Church*

**10th நவம்பர் / November 2024 ஞா யிறு ஆராதனை**

**Methodist School Sunday**

✝ ***ஆராதனைக்கு அழைப்பு*** — ***திருமதி எமிலி***
Call to Worship — Mrs. Emily

***இறைவணக்கப்பாடல்*** — ***பாடகர் குழு***
Introit — Choir

***ஜெபம்*** — ***திருமதி எமிலி***
Prayer — Mrs. Emily

✝ ***தொடக்க பாடல்*** — ***சபையார் இணைந்து***
Opening Song — Congregation

***அலங்கார வாசலாலே***

*1. அலங்கார வாசலாலே*
*கோவிலுக்குள் போகிறேன்*
*தெய்வ வீட்டின் நன்மையாலே*
*ஆத்துமத்தில் பூரிப்பேன்*
*இங்கே தெய்வ சமூகம்,*
*மெய் வெளிச்சம், பாக்கியம்.*

*2. கர்த்தரே, உம்மண்டை வந்த*
*என்னண்டைக்கு வாருமேன்.*
*நீர் இறங்கும்போதானந்த*
*இன்பத்தால் மகிழுவேன்*
*எனது இதயமும்*
*தெய்வ ஸ்தலமாகவும்.*

*3. பயத்தில் உம்மண்டை சேர*
*என் ஜெபம் புகழ்ச்சியும்*
*நல்ல பலியாக ஏற*
*உமதாவியைக் கொடும்.*
*தேகம் ஆவி யாவையும்*
*சுத்தமாக்கியருளும்.*

*4. நல்ல நிலத்தில் விழுந்த*
*விதை பயிராகுமே*
*நானும் அவ்வாறே மிகுந்த*
*கனிகளைத் தரவே,*
*வசனத்தைக் காக்க நீர்*
*ஈவளிக்கக் கடவீர்.*

✝ ***மாறி வாசித்தல் 45ம் ஞாயிறு*** — ***சபையார் இணைந்து***
*"சங்கீதம் 137"* — Congregation

"பாபிலோன் ஆறுகள் அருகே"
Psalter Reading "Psalm 137"

✝ ***தந்தை போற்றி*** — ***சபையார் இணைந்து***
Gloria Patri — Congregation

***துதி ஆராதனை***
Singspiration

***ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Thanksgiving & Pastoral Prayer — Rev. Vijay Joseph

***பரமண்டல ஜெபம்*** — ***சபையார் இணைந்து***
Lord's Prayer — Congregation

✝ ***காணிக்கை பாடல்*** — ***சபையார் இணைந்து***
Offertory Song — Congregation

***இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை***

*1. இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை*
*என்னென்ன துன்பங்கள் நேரிட்டாலும்*
*சிங்கத்தின் வாயினின்றும் இரட்சிப்பார்*
*பங்கம் வராதென்னை ஆதரிப்பார்*

***நெஞ்சமே நீ அஞ்சிடாதே***
***நம்பினோரைக் கிருபை சூழ்ந்திடுதே***
***இம்மட்டும் காத்தவர் இம்மானுவேல்***
***இன்னமும் காத்துன்னை நடத்துவார்***

*2. நாசியில் சுவாசமுள்ள மாந்தரை*
*நம்புவதல்ல தம் ஆலோசனை*
*கோர பயங்கர காற்றடிக்கும்*
*கன்மலைமேல் கட்டும் வீடுநிற்கும்*

*3. விஸ்வாசத்தால் நீதிமான் பிழைப்பான்*
*வறட்சி மிகுந்த காலத்திலும்*
*பக்தன் வலது பாரிசத்திலே*
*கர்த்தன் தாம் நிற்பதால் அசைந்திடான்*

*4. இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெற்றே*
*ஏகிப்பறந்திடும் பக்தரோடே*
*சேர்ந்தென்றும் வாழ்ந்திடும் ஐக்யத்திலே*
*ஜெயகெம்பீரமே உனக்குண்டே*

*5 அங்கே அநேக வாசஸ்தலங்கள்*
*அன்பின் பிதா வீட்டில் ஜொலிக்குதே*
*நேர்த்தியான இடங்களில் உந்தன்*
*நித்தியபங்கு கிடைத்திடுமே*

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **திருமதி. அனிதா ராபின்சன்**
**வெளி *22 : 1 - 5*** — Mrs. Anitha Robinson
Scripture Reading
Revelation 22 : 1 - 5

**அருளுரை** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

**குதூகலம் நிறைந்த நன்னாள்**

**குதூகலம் நிறைந்த நன்னாள்**
**நடு வானில் மின்னிடுமே**
**இது வரை இருந்த துன்பமில்லை**
**இனி என்றுமே ஆனந்தம்.**

*1.* தள கர்த்தனாம் இயேசு நின்று
நித்தம் செய்திடுவார் நன்று
அவர் ஆவியினால் புது பெலனடைந்து
ஜெய கீதங்கள் பாடிடுவோம்

*2.* புவி மீதினில் சரீர மீட்பு
என்று காண்போம் என ஏங்கும்
மன மகிழ்ந்திடவே - அவர் வந்திடுவார்
மணவாட்டியாய் சேர்த்திடவே

*3.* ஜெப விழிப்புடன் வாஞ்சையாக
அவர் வருகையை எதிர்நோக்கி
நவ எருசலேமாய் தூய அலங்காரமாய்
நாம் ஆயத்தமாகிடுவோம்

*4.* ஜீவ ஒளி வீசும் கற்களாக
சீயோன் நகர்தனிலே சேர்க்க
அருள் சுரந்திருந்தார் நாமம் வரைந்திருந்தார்
அவர் மகிமையில் ஆர்ப்பரிப்போம்

*5.* தேவ தூதர்கள் கானமுடன்
ஆரவார தொனி கேட்கும்
அவர் கிருபையினால் மறுரூபமாக
நம்மை இனிதுடன் சேர்த்திடுவார்

**அறிவிப்புகள்**
Announcements

✝ **மனப்பாட வசனங்கள்** — **சபையார் இணைந்து**
Weekly Memory Verses — Congregation
**வெளி *22 : 3***
Revelation 22 : 3

***3.* இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்.**

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ **சபையார் நிற்கவும் ⁄ Indicates Congregation standing**